**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 232/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 1 |
| Name (திரு/திருமதி) | : லூர்துமேரி |
| Father's Name/ Husband's Name | : சின்னையன் |
| Village & Taluk | : முட்டத்தூர் |
| Calling | : இல்லத்தரசி |
| Age | : 35 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.09.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. ஆஜர் எதிரியை எனக்கு தெரிவும் அவர் எனது உறவினர் ஆவார். அவரை நான் திருமணம் செய்து கொள்ளலாம் என நினைத்து அவருக்கு டாட்டா ஏஸ் வாகனம் வாங்குவதற்காக கடந்த 2016ம் வருடம் அவர் கேட்டதன் பேரில் ரூ.1,00,000/- சோழன் பைனான்சில் இருந்து பெற்று தந்தேன். அதன் பின்னிட்டு அதே வருடம் மேற்படி வாகனத்திற்கு FC மாற்ற வேண்டும் என கூறி பணம் கேட்டார். அதன் பேரில் நான் எனது அம்மாவின் நகையை அடகு வைத்து ரூ.60,000/- அவரிடம் கொடுத்தேன். சுமார் 3 மாதங்கள் கழித்து நான் எதிரியிடம் கொடுத்த பணத்தை மீண்டும் தருமாறு கேட்டபோது எதிரி என்னிடம் தற்போது தான் வாகனம் இயங்க தொடங்கியுள்ளது எனவே பணத்தை அடுத்த மாதம் தருவதாக கூறினார். ஆனால் பணத்தை கொடுக்கவில்லை.

2. அதன் பின்னிட்டு மீண்டும் மூன்று மாதங்கள் கழித்து எதிரி என்னிடம் மேற்படி வாகனம் பழுதாகிவிட்டது என்றும், அதனை சரி செய்ய வேண்டுமானால் ரூ.15,000/- ஆகும் என்றும், கூறினார். அதன் பேரில் நான் எனது நகைகளை அடகு வைத்து மேற்படி பணத்தையும் எதிரியிடம் கொடுத்தேன். அதன் பின்னிட்டும் எதிரி என்னிடம் கடனாக பெற்ற தொகையை திரும்ப செலுத்தவில்லை. அவர் வாங்கியதாக சொல்லும் வாகனத்தையும் என்னிடம் காண்பிக்கவில்லை. எனவே நான் 2016ம் வருடத்தில் எதிரியின் வீட்டிற்கு சென்று மேற்படி விவரங்களை அவரது பெற்றோர்களிடம் கூறினேன். அதற்கு அவர்கள் என்னிடம் என்னை கேட்டா பணம் கொடுத்தாய் எதிரியிடமே பெற்றுக்கொள் என்று கூறி அனுப்பிவிட்டனர்.

3. பின்பு 2016ம் வருடம் ஒரு நாள் எதிரியை நான் வேலை செய்யும் கிளினிக்கிற்கு வரவழைத்து பணத்தை தருமாறு கேட்டேன். அவர் காலை சுமார் 8.00 மணியளவில் வந்தார். நான் எதிரியிடம் பணத்தை தருமாறு கெஞ்சி கேட்டபோது அவர் என்னை ஒரு அடி அடித்துவிட்டு சென்றுவிட்டார். அதன் பின்னிட்டு ஒரு வாரம் அவரிடம் தொலைபேசியில் பணத்தை கொடுக்குமாறு கேட்டேன். அப்போதும் எதிரி பணத்தை தரவில்லை. எனவே, நான் எதிரியிடம் இருந்து பணத்தை திரும்ப பெற்றுதறுமாறு செஞ்சி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் முதல் விசாரணையில் அளித்துள்ள சங்கதிகளை தான் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நானும், எதிரியும் காதலித்து திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் எத்தனை வருடங்கள் காதலித்து வந்தேன் என்றால் எதிரியை நான் காதலிக்கவில்லை. அவர் எனது அத்தை மகன் ஆவார். எனவே அவரை திருமணம் செய்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் தான் பழகி வந்தேன். நான் தற்போது பெங்களுருவில் வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான்.

2. ரூ.1,00,000/– யை எதிரி டாட்டா ஏஸ் வாங்குவாற்காக 2016ம் வருடம் 3ம் மாதம் கேட்டார், தேதி ஞாபகம் இல்லை. மேற்படி பணத்தை சோழன் பைனான்சில் எனது பெயரில் தான் கடனாக பெற்றேன் என்றால் சரிதான். பைனான்சில் கடன் பெற்றதற்கான ஆவணங்களை எனது புகாருடன் இணைத்து காவலர்களிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள ரூ.60,000/– யை எதிரியிடம் கொடுத்த தேதி மற்றும் மாதம் நினைவில் இல்லை. ஆனால் அதே வருடத்தில் தான் கொடுத்தேன். எனது தாய்க்கு சொந்தமான நகைகளை உதயகுமார் அடகு கடையில் அடகு வைத்து மேற்படி ரூ.60,000/– ற்கான நகை ரசீதை புகாருடன் இணைத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3. நான் சொல்வது பொய் என்றாலும், எதிரிக்கு நான் பணம் கொடுத்திருந்தால் அதற்கான ரசீதுகளை நான் புகாருடன் இணைத்து கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள ரூ.15,000/யை கொடுப்பதற்காக எனக்கு சொந்தமான நகைகளை அடமானம்

வைத்து கொடுத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல, மேற்படி நகைகளை எதிரி என்னிடம் பெற்று சென்று அவரே தான் அடகு வைத்தார்.

4. எதிரி என்னை ஸ்ரீராம் கிளினிக்கில் வைத்து அடித்ததாக குறிப்பிட்டுள்ளேன். அது தொடர்பாக நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை. புகார் மனுவை நான் தான் எழுதினேன். செஞ்சி காவல் நிலையத்தில் இருந்த பாஸ்கர் என்ற காவலரிடம் புகார் மனுவை கொடுத்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகலை பெற்றுக்கொண்டேன், அதற்கான முதல் தகவல் அறிக்கையில் கையொப்பம் செய்தேன். காவலர் என்னிடம் எத்தனை கையொப்பம் பெற்றார் என்பது தற்போது நினைவில் இல்லை.

5. முதல் தகவல் அறிக்கையில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். புகார் அளித்த பின்னர் நான் பெங்களூருக்கு செல்லவில்லை. இங்கு தான் இருந்தேன். புகார் கொடுத்த பின்னிட்டு இன்று வரை காவலர்கள் என்னை இவ்வழக்கு தொடர்பாக விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை. என் முன்னிலையில் காவலர்கள் என் வாக்குமூலத்தை தட்டச்சு மூலம் பதிவு செய்து கொள்ளவில்லை. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் தான் எதிரியை ஏமாற்றிவிட்டு வேறு திருமணம் செய்து கொண்டு சென்றுவிட்டேன் என்றாலும், அதனை எதிரி கேட்டதன் காரணமாகத்தான் அவர் மீது பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.